**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

**Published on 14, July-2025** **ISSN:2320-4842 (P) 3049-2688 (O)**

# தமிழ் இலக்கியங்களும், கதைப்பாடல்களும்

**நெ. மைனர்சாமி**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னை பல்கலைக் கழகம்
சென்னை 600 005

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழர் தேசத்தை தமிழர் ஆட்சி செய்த போது தோன்றிய இலக்கியங்கள் வாயிலாக மொழிச் செழுமையும், மக்கள் வாழ்வியல் வளத்தையும் அறம் நிறைந்த ஆட்சியையும் காண முடிகின்றது. நாயக்கர் ஆட்சியின் போது தோன்றிய இலக்கியங்கள் வாயிலாக அறமற்ற ஆட்சி, மக்கள் பட்ட இன்னல்கள், மொழிச் சிதைவு, மதம், சாதி, மூடநம்பிக்கைகள் ஆகியவற்றைக் காண முடிகின்றது. இக்காலம் கதைப்பாடல் செழித்தோங்கிய காலம்;. கதைப்பாடல்களின் உள்ளடக்கம், சிலப்பதிகாரத்தில் கதைப்பாடல்கள், கதைப்பாடல்களின் வகைமை, சங்க காலம், சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம் ஆகிய தலைப்புகள்; இக்கட்டுரையின் வாயிலாக ஆயப்படுகின்றது.*

**முன்னுரை**

*சங்க காலம் தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலமாதலால் தமிழர்களின் பொற்காலம் ஆகும். இங்கு காதலும் வீரமும் போற்றப்பட்டன. இங்குதான் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் தோன்றின. இவற்றில் காதலும் வீரமும் பாடற் பொருளாய் அமைந்தன. இவற்றுள் காதல் கருத்துக் களஞ்சியங்களாகத் திகழ்பவை, அகப்பாடல்கள். வாழ்வியல் கருத்துக் களஞ்சியங்களாக திகழ்பவை புறப்பாடல்கள் ஆகும். இங்கு கடவுளுக்கு அளித்த முக்கியத்துவத்தை விட, மக்கள் கல்விக்கு அளித்த முக்கியத்துவம் அதிகம் என்பதையும் மக்கள் சாதி, மத பேதமின்றி சமத்துவத்துடன் வாழ்ந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது.*

*முதலாம் வேற்றரசு காலம் என்பது களப்பிரர்கள் காலம். இக்காலத்தில் சமணம் செழித்திருந்தது. துறவறத்தை ஆதரித்தனர். பெண்மையை வெறுத்தனர். இக்காலத்தை ஆரியர்கள் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு நால்வருணப் பாகுபாடும், வேள்வி முறைகளும், வடமொழி கருத்துகள் நிறைந்த கற்பனைக் கதைகளையும் தமிழில் மொழி பெயர்த்தனர்.*

*கி.பி.600 முதல் 1250 வரையிலான காலத்தில் மங்கிய நிலையில் காணப்பட்ட சைவம், வைணவம் உயிர்ப்பிக்க ஆரம்பித்தது. சைவமும் வைணவமும் ஏற்றமும் இரக்கமுமாக இருந்தது. பக்தி இலக்கியங்களும் திவ்யப் பிரபந்தங்களும் பிறந்தன. சோழர் காலங்களை காப்பியக் காலம் என்னும் அளவிற்கு காப்பியங்களும் பேரிலக்கியங்களும் தோன்றின. தமிழ்*

இலக்கியம் போற்றப்பட்டது. முகமதியர் ஆட்சியில் கோவில்கள் தாக்கப்பட்டன. மக்கள் வெறுப்புற்றார்கள். இரண்டாம் வேற்றரசு என்பது விஜயநகர பேரரசுக் காலம். இக்கால கட்டத்தில் தமிழர் இசையும் நாடகமும் தமிழர்களை விட்டுச் சென்றன. அந்நிய குடியேற்றத்தில் தமிழகம் நெருக்கடியை சந்தித்தது. தமிழினம் ஜாதியாலும், மதத்தா லும் சிதருண்டன. சாதியின் பெயரால் தாக்குதலுக்குண்டாயின. பெண்கொலை, சாதியக் கொலை, மதத்தின்பால் இழைக்கப் பட்ட கொடுமைகள் இக்காலத்தில் தோன்றிய கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளன. இக்காலக்கட்டத்தில் தோன்றிய கதைப்பாடல்களை ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டியது அவசியம் ஆகும்.

### சிலப்பதிக்காரத்தில் கதைப்பாடல்கள்

சிலப்பதிக்கார அம்மானைகளில் கதை இடம் பெற்றிருக்கின்றன. கலம்பகத்தில் ஆட்டமும், கதைப்பாடலும் இணைந்திருக் கின்றன. பண்டையத் தமிழில் ஆட்டக்கலை வீழ்ச்சியடைந்து கதையமைப்பு மிஞ்சி கதைப் பாட்டாக மலர்ந்துள்ளது. விளையாட்டும், கதைப்பாட்டும் இருவேறு நிலையாகியுள்ளன.

### கடைச்சங்க காலம் கி.மு. 300 முதல் கி.பி 250 வரை

மூவேந்தர்களுக்குள்ளும் அடிக்கடிப் போர் கள் மூண்டன. ஆனால் அவை நாட்டு மக்களின் அமைதியைக் குலைக்கவில்லை, நாட்டு மக்கள் சாதி பாகுபாடற்று ஒற்றுமையாக வாழ்ந்தனர். நாடு வளம் செழித்தது. சமயப்பூசல் அற்ற காலம். முச்சங்கத்தில் கடைச்சங்க காலத்தை சங்ககாலம் எனவும் கடைச்சங்கத்தில் தோன்றிய இலக்கியத்தையே சங்க இலக்கியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

### முதலாம் வேற்றரசு காலம் கி.மு. 250 முதல் கி.பி. 600 வரை

முதன் முதலாகத் தமிழகம் தமிழ் மன்னர்களின் ஆட்சி இழந்து அன்னியர் களின் ஆட்சிக்குள்ளாகியது. தமிழகத்தின் வடபகுதி பல்லவர்களிடமும், தென் பகுதி களப்பிரரிடமும் சிக்கின. பல்லவர்கள் பௌத்தத்தையும் களப்பிரர்கள் சமணத்தை யும் போற்றினர். இதனால் பௌத்தம் காவிரிப்பூம்பட்டினத்தையும், சமணம் மதுரை யையும் மையமாகக் கொண்டு பரவின. இவ்விரு சமயங்களும் பெண்மையை வெறுத்தன. வீடுபேறு மேல் ஈர்ப்பு கொண்டன. ஆரியர்கள் சங்ககாலத்திலேயே தமிழகத்தில் பரவிக் காணப்பட்டனர். சங்கம் மருவிய காலத்தை ஆரியர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். நால்வருணப் பாகுபாடும் வேள்விமுறைகளும் பிற வடமொழிக் கருத்துகளும் கதைகளும் புழங்கலாயின. இதற்கேற்ற இலக்கியங்களும் தோன்றியன. சங்க காலத்தில் அரசியல் தலைமை மேலோங்கி இருந்தன. சங்கம் மருவிய காலத்தில் அரசியல் தலைமைப் பண்பு சமயத்தலைவர் பக்கம் மாறின. சமய நூல்கள் தோன்றின. அறநூல்களும் நீதி நூல் களும் தோன்றின. இக்கால இலக்கியத்தில் கவிதைப் பண்பு குறைந்து, வடசொல் மிகுந்து காணப்பட்டன.

### பல்லவர் காலம் கி.பி. 600 முதல் 875 வரை

இக்காலத்தை பக்தி இயக்க காலம் அல்லது சைவ வைணவ காலம் எனலாம். சிம்ம விஷ்ணு பல்லவன் சோழ நாட்டையும் தொண்டை நாட்டையும் களப்பிரர்களிட மிருந்து கைப்பற்றினான். தெற்கே பாண்டியர் கருகவேள் களப்பிரர்களிடமிருந்து தன் நாட்டையும் விடுவித்துக் கொண்டான். பௌத்தம் மங்கியது, சமணம் குன்றாதுநின்று நிலவியது. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரவர்மனும் பாண்டியன் நின்றசீர் நெடுமாறனும் சமண சமயத்தை பற்றிக் கொண்டனர். மக்களும் சமண மதத்தை தழுவினர். நாளடைவில் இந்து சமயம் சமண பௌத்த நற்கருத்துகளை தமதாக்கிக் கொண்டது. சைவ வைணவ சமயங்கள் மக்களின் உணர்விற்கு ஏற்ற இலக்கியங் களைப் படைத்தன. சமணப் பள்ளிகளில் ஊழல் மிகுதி காரணமாக சமணம் மக்கள் ஆதரவை இழந்தது. சைவ, வைணவ சமயங்கள் இணைந்து நின்று சமணத்தைச் சாடின. அதன்பின் சைவமும் வைணவமும் சிறக்கத் தொடங்கின.

இதன் விளைவாக கி.பி.7ஆம் நூற்றாண்டில் சைவம் சிறந்து வைணவம் தாழ்ந்தது.

கி.பி.8ஆம் நூற்றாண்டில் வைணவம் சிறக்க சைவம் சிறிது தாழ்ந்தது. அதன்பின் இரு சமயங்களும் இணைந்து ஏற்றமுறத் தொடங்கின. சமணம் சாய்ந்தது. சைவ

சமயக் குரவர்கள் சமயப் பெரியோர்கள் ஆகியோர் கோவில் தோறும் சென்று இறைவனை வாழ்த்திப் பாடினர். இயற்றமிழ் இசை மணம் பெற்றது. தமிழிசை சங்ககாலம் போலவே அருந்தமிழ் மொழியாக மாறியது. பக்தி இலக்கியங்களான தேவாரம், திவ்ய பிரபந்தங்கள் பிறந்தன. ஆலய விழாக்களில் இசையும் கூத்தும் சிறந்து விளங்கின. பைந் தமிழில் வடசொற்கள் கலந்து உலா, கோவை, கலம்பகம் போன்ற பக்திப் பாடல்கள் பிறந்தன. பல்லவர்கள் வடமொழிக்கே பேராக்கம் தந்தமையால் இவர் கால கட்டத்தில் தமிழிலக்கியம் வட மொழிப் போக்கையே பெரிதும் மேற்கொண்டது. (விமலானந்தன் தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம் 10).

## சோழர் காலம் (கி. பி. 875 - 1250)

இக்காலம் முப்பெரும் கவிச்சக்கரவர்த்திகள் கம்பர், ஓட்டக்கூத்தர். செயங்கொண்டார் ஆகியோர் முன்னிலையில் இருந்த காலம். திருத்தக்கதேவர், சேக்கிழார், அவ்வை, புகழேந்தி போன்ற பெரும் புலவர்கள் தோன்றிய காலம். காப்பிய உற்பத்திக் காலம். காப்பிய காலம் எனுமளவிற்கு காப்பியங்கள், பேரிலக்கியங்கள், சிறுபனுவல் கள், இலக்கணங்கள், புராணங்கள், நிகண்டு கள், நாடகங்கள், தத்துவநூல்கள். மெய் கீர்த்திகள், உரைநடை நூல்கள் எனப் பைந்தமிழ் பல்கிப் பெருகியது. சோழர்கள் காலம் தங்களது ஆட்சிச் சிறப்பால் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் பேணினர். தமிழ் இலக்கியங்களில் வட மொழிச் செல்வாக்கை இவர்களால் அறவே விட முடியவில்லை.

தத்துவ மரபைப் போற்றிய தாயுமானவர் இலக்கணம், தத்துவம் ஆகியவற்றில் சிறந்த சிவஞானமுனிவர், சிவஞான போதவுரை, மராட்டியம் முத்துவீரிய உபாத்தியாயர், முத்து வீரியம் ஆகிய ஐந்து இலக்கண நூல்களாக குறவஞ்சியைப் பாடிய திரிகூடராசப்ப கவிராயர், இராம நாடகம் பாடிய அருணாச்சல கவிராயர், அபிராமி அந்தாதியைப் பாடிய அபிராமிப்பட்டர், பிள்ளைத்தமிழ் பாடிய பகழிக் கூத்தர் போன்றோர் இக்காலத்தவரே ஆவார். (தமி;ழண்ணல், தமிழ் இலக்கிய வரலாறு 52).

## இரண்டாம் வேற்று அரசு (கி.பி.1300 முதல் 1600)

கி.பி.1329இல் முகமதியர் மதுரையில் ஆட்சியை நிலை நாட்டினர். அப்போது கோவில்கள் தாக்கப்பட்டன. எனவே மக்கள் இஸ்லாமிய ஆட்சி மீது வெறுப்புற்றனர். மக்களின் ஆதரவுடன் விஜயநகர பேரரசு இஸ்லாமியரைத் தோற்கடிதத்து. கி.பி.1370இல் விஜயநகர பேரரசு மதுரையில் தனது ஆட்சியை கி.பி.1565 வரை நீட்டித்தது.

அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிப் பக்தி இலக்கியத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார். இக்கால இலக்கியங்களில் வடசொற்கள் மிகுதியாய் இருந்தன. தெலுங்கும் கன்னடமும் வடமொழியை முழுவதுமாக ஏற்றன. வட மொழிப் புராணங்கள் எண்ணற்றது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. இக்காலகட்டத்தில் தான் தமிழர் சமயங்கள் தமிழருடையதல்ல எனவாகியது. தமிழரின் இசையும், நாடகமும், தமிழர்களை விட்டுச் சென்றன. தமிழக மெங்கும் முகமதியர் குடியேற்றம், தெலுங்கர் கள், கன்னடியர்கள் குடியேற்றத்தால் தமிழகம் நூற்றுக்கணக்கான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சின்னாபின்னமாகியது. சாதி மதம் பிரிவினையற்று பெண்ணியத்தை பேணிப் போற்றி சமத்துவத்தோடு அறவாழ்வு வாழ்ந்து வந்த தமிழ் இனம் இக்காலக் கட்டங்களில் சாதிகளாலும், மதத்தாலும் சிதறுண்டு தாக்குதலுக்குள்ளாகின. தனிமனிதன் மற்றும் குறிப்பிட்ட சமூகம் அனுபவித்த கொடுமைகளை கி.பி.1400 முதல் 1900 வரையிலான காலகட்டங்களில் தோன்றிய கதைப்பாடல்களின் வாயிலாக அறிய முடிகின்றன. இன்றளவும் நீட்சிப் பெற்றுக் கொண்டிருக்கிற சாதியக் கொடுமைகள், ஆணவக் கொலைகள் ஆகியவை தமிழ்ச் சமூகத்தின் மிகப்பெரிய சிக்கலாகும்.

## கதைப்பாடல்களின் உள்கட்டமைப்பு

கதைப்பாடல்கள் பதினான்காம் நூற்றாண் டில் தோன்றியவையாக குறிப்பிடப்படுகின் றன. தமிழில் கதைப்பாடல்கள் 1. கதை (முத்துப்பட்டன் கதை, நல்லதங்காள் கதை, அண்ணம்மாள் சுவாமி கதை) 2. கதைப் பாடல் (காத்தவராயன் வீரபாண்டி கட்ட பொம்மன்) 3. அம்மானை (இராமப்பையன் அம்மானை, கள்ளழகர் அம்மானை)

4. பாட்டு (காமன் பாட்டு) 5. மாலை (பவளக் கொடி மாலை, அல்லிராணி மாலை 6. வெற்றி (திவான் வெற்றி) 7. ஏற்றம் (ஏணி ஏற்றம் 8. கும்மி (அரிச்சந்திரன் கும்மி, சிவக்கெங்கக் கும்மி) 9. காவியம் (கயிலைக் காவியம்) 10. குறவஞ்சி (ஞானரத்னக் குறவஞ்சி) 11. வனவாசம் (பஞ்ச பாண்டவர் வனவாசம்) 12.சோபனம் (வலிதாம்பாள் சோபனம்). 13. மசக்கை (பொன்னுறுவி மசக்கை) 14. உபாக்கியானம் (வத்சல உபாக்கி யானம்) 15. சரிதம் (ஆதியூர் சரிதம், மன் மதன் சரிதம்) 16. விருத்தம் (கட்ட இராம நாதபுர போட்டி) 17. பூசை (மார்க்கண்டன் திருக்கடவூர் பூசை) 18. வாக்கியம் (கபோத வாக்கியம், குசலடி வாக்கியம்) 19. கீர்த்தனை (கயிய சரித்திரக் கீர்த்தனை) 20. சண்ணடை (கான்சாகிபு சண்ணடை) 21. படைப்போர் (கன்னடிய படைப்போர் 22. யாகம் (அசுவ மேத யாகம்) 23. குறம் (துரோபதை குறம்) 24. சிந்து (பூலித்தேவன் சிந்து) 25. தூது (புலேந்திரன் தூது) 26. வில்லுப்பாட்டு (சுடலைமாடன் கதை வில்லுப்பாட்டு) எனக் கதைப் பாடல்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

## கதைப்பாடல்களின் வகைமை

கதைப்பாடல்களை நாட்டுப்புறவியல் ஆய்வறிஞர்கள் பல்வேறு வகையில் வகைப்படுத்துகின்றனர். அவற்றில் கோ. கேசவன் கதைப்பாடல்களை 7 வகைகளாகப் பகுத்துள்ளார். அவை:

1. புராணக் கதைப்பாடல்
2. தெய்வப்புனைக் கற்பனை கதைப்பாடல்
3. புத்தார்த்தக் கற்பனைக் கதைப்பாடல்
4. சமூகக் கற்பனைக் கதைப்பாடல்
5. வரலாற்றுக் கதைப்பாடல்
6. இலக்கியப் புனைகதைப் பாடல்

என்பவையாகும்.

இலக்கியங்களின் பரிணாமம் என்பது அதன் பல்வேறு காலக்கட்டங்களைப் பொறுத்து அமைகிறது. ஒவ்வொரு காலக்கட்டமும் மக்களின் மனநிலையைப் பொறுத்து அமைந்தன. மக்களின் மனநிலை ஆட்சி செய்யும் மன்னனைப் பொறுத்தது. சங்க காலத்தில் மூவேந்தர்களின் ஆட்சிக் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் ஏற்றமிகு காலமாகவே தோற்றமளித்துள்ளன.

## முடிவுரை

சமூக சமய மாற்றங்களின் தளமாக இலக்கியங்களே அமைந்திருப்பதை அறிய முடிகின்றது. சங்ககாலத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் தோன்றின. இவற்றில் காதலும் வீரமும் பாடற் பொருளாய் அமைந்தன. இவற்றில் காதல் கருத்துக் களஞ்சியங்களாகத் திகழ்பவை அகப்பாடல் கள். இவையே வாழ்வியல் கருத்துக் களஞ்சியங்களாகவும் காணப்படுகிறது. மக்கள் மூடநம்பிக்கை இன்றி சமத்துவமாக வாழ்ந்து ள்ளதையும் பெண்ணியம் போற்றப்பட்டதை யும் அறிய முடிகின்றது.

சங்கம் மருவிய காலமான களப்பிரர் காலத்தில் சமணம் செழித்து, சமணம் சார்ந்த இலக்கியங்கள் துறவறத்தை போற்றியும் பெண்மையை வெறுத்தும் வீடுபேறு மேல் ஈர்ப்பும் கொண்டதாக அமைந்து சிறந்தன.

இரண்டாம் வேற்று அரசு காலமான விஜயநகர பேரரசின் ஆட்சிக் காலங்களில் காணப்படும் கதைப்பாடல்களை போல இதற்கு முன்பாக வேறு எங்கும் காண வில்லை. இக்காலத்தில் தான் கதைப் பாடல்கள் செழித்தோங்கி காணப்படுகின் றது. சாதியம், மத மூட நம்பிக்கைகள் கலப்பு திருமண எதிர்ப்பு என்று பல்வேறு இன்னல்களுக்கு மக்கள் ஆளாகினர். எனவே கி.பி 1400 முதல் 1900 வரையிலான காலத்தில் தோன்றிய கதைப் பாடல்கள் மக்கள் வாழ்ந்த வாழ்க்கையை பிரதிபலிப் பனவாக அமைந்து காணப்படுகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. கி.வா. ஜெகநாதன், மலையருவி (நாட்டுப் புற பாடல்கள்), 2022.
2. சு. தாமரைப்பாண்டியன், கதைப்பாடல் சுவடித்திரட்டு (பகுதி ஐ முதல் ஐஐஐ 2014 வரை).
3. தமிழண்ணல், இராம. பெரிய கருப்பன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, 2024.
4. பாலூர் கண்ணப்ப முதலியார், தமிழ் இலக்கிய வரலாறு, 2008.